THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Thursday, the 23rd February 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Inspector-General of Prisons

* 2 *S.N.Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the basis on which promotion was made to the post of the Inspector-General of Prisons, recently; and

(*b*) the reasons for selecting an officer from the Police for this post?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The recent appointment for the post of the Inspector-General of Prisons was not made by promotion. The seniormost Deputy Inspector-General of Police was appointed on transfer as he was considered suitable in all respects for filling the post of Inspector-General of Prisons.

SRI M. KALYANASUNDARAM : இதற்கு முன்பு ஜெயில் இலாகாவிலே அதிக சர்வீஸ் உள்ள அதிகாரிகளை இந்தப் பதவிக்கு உயர்த்துவது வழக்கம். அதற்குப் பிறகு ஐ.ஏ.எஸ் அதிகாரிகளாக இருக்கவேண்டுமென்று சொல்லி, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். இந்த இரண்டு முறைகளையும் கைவிட்டு விட்டு, இப்பொழுது ஒரு போலீஸ் அதிகாரியை உயர்த்தி இருப்பதன் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பு ஐ.எம்.எஸ். ஸூப்பிரண்டெண்டுகளாக இருந்தபொழுது, அவர்களில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்ஸ்பெக்டர்-ஜெனரலாக நியமிக்கப்பட்டு வந்தார். ஐ.எம்.எஸ். முடிந்த பிறகு சென்ற சில ஆண்டுகளிலே ஐ.சி.எஸ்-லிருந்து நியமிக்கப்பட்டார்கள். அதற்குப் பிறகு ஐ.ஏ.எஸ்.-லிருந்து நியமிக்கப்பட்டு வந்தார்கள். சம்பந்தப்பட்ட ஜெயில் சர்வீஸ் விதிகளிலே ஸூப்பிரண்டெண்டுகளிலிருந்து பிரமோஷன் மூலம் செய்யலாமென்று இருக்கிறது. அல்லது ஏதாவது சர்விசிலிருந்து டிரான்ஸ்பர் பண்ணலாம். பிரமோஷன் பண்ணுவதற்குத் தகுதியானவர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆதலால் டிரான்ஸ்பர் மூலம் ஒரு டி. ஐ. ஜி.-ஐப் போடுவது தகுதியாக இருக்குமென்று அரசாங்கம் கருதி செய்யப்பட்டிருக்கிறது.

[23rd February 1961

Sri M. KALYANASUNDARAM : இப்பொழுது சிறை இலாகா சூப்பிரண்டெண்ட் பதவிகளுக்கு நேரடியாக படித்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அப்படியிருக்கும்பொழுது அதிலேயிருந்து பிரமோட் பண்ணுவதற்கு அதிகாரிகள் இல்லையா? யாராவது அதிகாரிகள் பரிசிலிக்கப்பட்டார்களா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : வேறு ஒன்றும் பரிசீலிக்கப்படவில்லை. நான் முன்பு கூறியதுபோல், பிரமோஷன் மூலம் செய்யலாம், டிரான்ஸ்பர் மூலம் செய்யலாமென்று விதி இருக்கிறது. டிரான்ஸ்பர் மூலம் செய்யலாமென்ற விதி கையாளப் பட்டது.

Sri A. A. RASHEED : Sir, is it not a fact that the Inspector-General of Prisons is appointed for a specific period and if so what is the specific period for which the present incumbent was appointed?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : There is no such thing as specific period for which the Inspector-General of Prisons is appointed.

Sri M. KALYANASUNDARAM : இப்பொழுது ஜில்லாக்களில் பல தொழில்கள் நடைபெறுகின்றன. ஜில்லா அதிகாரிகளை கண்காணிப்பது மட்டுமல்லாமல், நிர்வாக அனுபவமும் இருக்க வேண்டும். போலீஸ் அதிகாரிக்கு அப்பேர்ப்பட்ட நிர்வாக அனுபவம் உண்டா? அப்படியில்லை என்றால் ஏன் அவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : சென்ற சில ஆண்டுகளிலே ஐ.சி.எஸ்., ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப் பட்டு வந்தார்கள். அவர்களுக்கு என்ன தகுதியிருக்கிறதோ, அந்தத் தகுதி இந்தப் போலீஸ் அதிகாரிக்கும் இருக்குமென்று கருதி நியமித்திருக்கிறது.

Family income

***384 *Q*.—Sri S. M. ANNAMALAI** : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் குடும்பங்களின் வருவாயை கணக்கெடுக்கும் உத்தேசம் உண்டா?

(இ) அப்படியானால், எந்தெந்த இடங்களில் முதலில் ஆரம்பிக்கப்படும்?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.